




. 8 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com

மாற்றத்தின் ஆரம்பம்

dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 04.03.2026 . மலர் 04 . இதழ் 62. புதன்கிழமை

dhinatamil

. NAGERCOIL EDITION . 04.03.2026 . VOL 04 . ISSUE 62. WEDNESDAY . 8 PAGES . Rs. 5











அய்யா வைகுண்டரின் 194 - வது உதயதின விழா,
சிறக்க நல்வாழ்த்துக்கள்.
விழா காணவரும் அன்பு கொடி மக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.
T. பூவியூர் காமராஜ் M.A.,B.Ed
தென்தாமரைகுளம் பேரூர் செயலார்
7-வது வார்டு கவுன்சிலர், தென்தாரைகுளம் பேரூராட்சி


அய்யா வைகுண்டரின் 194 - வது உதயதின விழா,
சிறக்க நல்வாழ்த்துக்கள்.
விழாவினை காணவரும் பக்தர்களை வருக! வருக!!
என அன்புடன் வரவேற்கிறோம்.
நிர்வாகிகள்
அய்யா வைகுண்டர் கைபந்து கழகம்
சாமிதோப்பு


அய்யா வைகுண்டரின்
194 - வது உதயதின விழா
மாசி 20 (04.03.2026)
விழா காணவரும் பக்தர்களை வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறேன்.
S. சுபாஷ்
15-வது வார்டு கவுன்சிலர்,
தென்தாமரைகுளம் பேரூராட்சி

# மனித மனங்களில் இருளை அகற்றி ஒளியேற்றியவர் அய்யா வைகுண்டர்

**சாமிதோப்பு அய்யா வைகுண்டர் தலைமை பதியில் தினமுமே திருவிழா போன்று நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.**

வருடத்திற்கு 3 முறை திருவிழா நடைபெறுகிறது. வைகாசி, ஆவணி, தை மாதங்களில் 11 நாட்கள் திருவிழா நடைபெறும். ஆவணி, தை திருவிழாக்கள் தமிழ் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளிலும், வைகாசி திருவிழா தமிழ் மாதத்தின் 2-வது வெள்ளிக்கிழமையும் கொடி ஏறி 11 நாட்கள் நடைபெறும். இதில் 6-ம் திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். அன்று மாலை சர்ப்ப வாகனம் எடுக்கப்படும். நாகதோஷம் உள்ளவர்கள் தோஷம் நீங்க வந்து வழிபட்டு செல்வார்கள். அய்யாவிற்கு பால், சுருள் வைத்து வழிபாடு செய்வார்கள்.




**புண்ணிய பூமியாக விளங்கும் சாமிதோப்பு.**

இதேபோல் 8-ம் திருவிழா அன்று கலிவேட்டை நிகழ்ச்சி நடைபெறும். அன்று இரவு அய்யா வைகுண்டர் வடக்கு வாசலில் பக்தர்களுக்கு தவக்கோலத்தில் காட்சி யளித்து வருகிறார். 11-ம் திருவிழா அன்று தேரோட்டம் நடைபெறும். நான்கு ரத வீதிகளிலும் அய்யா வழி பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து வருவார்கள்.

தேர்த் திருவிழா வையொட்டி நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு வழிபட்டு செல்வார்கள்.

அய்யா வைகுண்டருக்கு வெற்றிலை, பாக்கு, தேங்காய், பன்னீர், பழம், எலுமிச்சம் பழம் ஆகியவற்றை சுருளாக வைத்து வழிபடுவார்கள். உப்பும், மிளகும் வாங்கியும் காணிக்கையாக செலுத்துவார்கள்.கார்த்திகை மாதம் 17 நாட்கள் திருஏடு வாசிப்பு நடைபெறும். தமிழ் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் அய்யா வைகுண்டசாமி பதியில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்படும்.

தினமும் அதிகாலை 3 மணிக்கு முத்திரி கிணற்றில் குளித்த பின்பு பணிவிடை செய்து வருகிறார்கள். கருவறை திறக்கப்பட்டு வாகன பவனி நடைபெறும். காலை, மாலை இருவேளையும் நான்கு ரத வீதிகளிலும் வாகன பவனி நடைபெற்று வருகிறது. அதன்பிறகு பக்தர்களுக்கு பிரசாதமாக சந்தனப்பால் வழங்கப்படும். காலை 11 மணிக்கு பணிவிடை, உச்சிப்படிப்பு நடைபெறும். மாலை 5 மணிக்கு உகப்படிப்பும், அதைத் தொடர்ந்து வாகன பவனியும் நடைபெறும்.தலைமை பதிக்கு தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் முதலில் முத்திரி கிணற்றில் பதமிட்டு அங்கிருந்து அய்யா வைகுண்டசாமி பதிக்கு வந்து தரிசனம் செய்து செல்வார்கள். முத்திரி கிணற்றில் பதமிட்டு வழிபட்டால் நோய் நீங்கும் என்பது ஐதீகம். அய்யாவை நினைத்து பக்தர்கள் பதமிட்டு வருகிறார்கள்.

அன்பில் எல்லோரையும் அரவணைத்து ஆள வேண்டும் என்று அய்யா விரும்பினார். எவருக்கு எவரும் குறைந்தவர் இல்லை, எல்லோரும் இந்த நாட்டின் மன்னர்கள் என்ற உயர்ந்த தத்துவத்தை உணர்த்துவதற்கு அய்யாவழி பக்தர்கள் தலைப்பாகை அணிந்து வர சொன்னார். எனவே தற்போதும் கோவிலுக்கு வரும் ஆண் பக்தர்கள் யாராக இருந்தாலும் தலையில் தலைப்பாகை அணிந்தே உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள்.

வடக்கு வாசலில் பக்தர்களுக்கு நாமம் கொடுப்பதில்லை. மாறாக திருமண்எடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்த புனித மண் அப்பகுதியில் பக்தர்கள் மிதித்து காலடிபட்ட மண் தான். இந்த மண்ணுக்கு அரிய மருத்துவ குணங்கள் உண்டு.அந்த திருமண் வடக்கு வாசலில் வைக்கப்பட்டுள்ளது. இதை பக்தர்கள் திருநாமமாக பூசி வழிபட்டு வருகிறார்கள். மேலும் பதிக்குள் நுழைந்ததும் குருமார்கள் நெற்றியில் நாமம் விட்டு வருகிறார்கள்.

முந்தைய காலத்தில் கீழ்ஜாதியை சேர்ந்தவர்களுக்கு ஆலயங்களில் நுழைய தடை இருந்தது. ஆனால் அய்யா காலத்தில் அது மாறுதல் அடைந்தது. ஆகவே அடுத்த சீர்திருத்தம் 'தொட்டு நாமம் சாற்றுதல்'என்ற பெயரில் வந்தது. பக்தர்கள் நெற்றியில் ஒருவர் நாமம் இடுவதே அது. பூசாரிகள் ஆலயங்கள் தரப்படும் விபூதியை பிரசாதத்தை தொடாமல் மேலிருந்து தூக்கி போடுவார்கள். ஆகவே நிழல் தாங்கல் அனைத்திலும் நாமம் இடும் வழக்கம் தொடங்கப்பட்டது.


அங்கிருந்து குருமார்கள் 2 விரல்களை கொண்டு பக்தர்கள் நெற்றியில் ஜோதி போன்ற நாமம் இடுமாறு கட்டளை இட்டார். பக்தர்கள் நாமமிட்ட பிறகு கருவறைக்குள் சென்று வழிபடுவார்கள்.

அய்யாவை நினைத்து வழிபடுபவர்களுக்கு நினைத்தது கை கூடி வருகிறது. லட்சக்கணக்கான பக்தர்களுக்கு நினைத்த காரியங்களை நிறைவேற்றி கொடுத்துள்ளார். இதனால்தான் அய்யா வைகுண்டசாமி பதிக்கு பக்தர்கள் அதிக அளவு வருகை தருகிறார்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மட்டுமின்றி, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து செல்கிறார்கள்.

சாமிதோப்பு தலைமை பகுதியில் வைகுண்டருக்கு கைகுத்தல் அரிசி மூலம் காய்கறிகளை சேர்த்து சமைக்கப்பட்ட உணவே பணிவிடை செய்யப்படுகிறது. அந்த உணவு மண்பானை கொண்டே சமைக்கப்படுகிறது. சமையலில் பூசணிக்காய், மிளகாய், கத்தரிக்காய், இளவக்காய், வாழைக்காய் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. அய்யாவிற்கு பக்தர்கள் தென்னங்கன்று மற்றும் கோமாதாவை காணிக்கையாக வழங்கி வருகிறார்கள். மேலும் நினைத்தது நடக்க வேண்டி பக்தர்கள் சந்தனக்குடம் எடுத்தும் வழிபடுகிறார்கள்.

சந்தன குடம் எடுக்கும் பக்தர்கள் பதியை சுற்றியுள்ள 4 ரத வீதிகளை சுற்றி வருவார்கள். குழந்தை வரம் வேண்டியும் பலரும் அய்யாவை வழிபட்டு செல்கிறார்கள். அவர்களுக்கு குழந்தை கிடைத்த பிறகு அந்த குழந்தையோடு வந்து அய்யாவை வழிபட்டு செல்கின்றனர். அப்போது அந்த குழந்தைக்கு முடி இறக்கி காணிக்கை செலுத்துகிறார்கள்.

பெண் குழந்தையாக இருந்தால் காதுகுத்தியும் செல்கின்றனர். அய்யா வைகுண்டசாமி தலைமை பதியில் தேங்காய் எண்ணெய் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் பக்தர்கள் தேங்காய் எண்ணையையும் காணிக்கையாக வழங்கி வருகிறார்கள்.



**நினைத்த காரியத்தை நிறைவேற்றி கொடுக்கும் அய்யா வைகுண்டர்.**

மேலும் பதியில் தங்கி இருப்பவர்களுக்கு வஸ்திரங்கள் வாங்கி கொடுத்து வருகிறார்கள். அன்னதர்மம், கருப்புகட்டி தர்மம், பழ தர்மங்கள் மிகச்சிறந்ததாக விளங்கி வருகிறது. நினைத்தது நிறைவேறியதும் தர்மம் வழங்குவதே இங்கு பிரதான ஒன்றாக உள்ளது.

நோய்கள் குணமாக சிலர் சாமித்தோப்பு பதிவில் தங்கியிருந்து தினமும் காலை மற்றும் மாலையில் முத்திரி கிணற்றில் பதம் இட்டு வழிபாடு செய்து வருகிறார்கள். நோய் குணமாகிய பிறகு இங்கிருந்து வீடுகளுக்கு திரும்பி செல்கிறார்கள். இதன்மூலம் அய்யாவை நம்பி வந்தவர்களை வாழவைக்கும் புண்ணிய பூமியாக சாமிதோப்பு விளங்கி வருகிறது.







வளர்க அய்யா வழி !!
அய்யா துணை
மலர்க தர்மயுகம்!!!
அய்யா வைகுண்டரின்
194 - வது உதயதின விழா
சிறக்க நல்வாழ்த்துக்கள்...
விழா காணவரும் பக்தர்களை வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்.
R.ராஜேஷ், R.தனேஷ், T.அகர்தீனா
ராஜதங்கம் பந்தல் அமைப்பகம்
சாமிதோப்பு, செட்டிவிளை Cell: 9486759570


அய்யா வைகுண்டரின் 194 - வது உதயதின விழா
சிறக்க நல்வாழ்த்துக்கள்.
விழா காணவரும் பக்தர்களை வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறேன்.
A.மணிகண்டன்
B.Com.,DCM.,DCA
தென்தாமரைகுளம்
குமரி கிழக்கு மாவட்ட தே.மு.தி.க


வளர்க அய்யா வழி
அய்யாதுணை
மலர்க தர்மயுகம்
அய்யா வைகுண்டரின் 194 - வது உதயதினவிழா
சிறக்க நல்வாழ்த்துக்கள்...
விழா காணவரும் அய்யாவின் அன்பு கொடி மக்கள்
அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.
உணவே மருந்து!
மருந்தே உணவு!
AVJ Since 2007
A.V.J. சித்த வைத்திய சாலை
சுவாமிதோப்பு, குமரி மாவட்டம்
Dr.J. வைகுந்த் B.S.M.S.,DYNS
பொது நல மருத்துவர்
Dr.S.P. பவித்ரா வைகுந்த் M.D.,(S)
மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவர்
Cell: 9943767600
சிறப்பு அம்சங்கள்:
நோய் தடுப்பு சிகிச்சை முறைகள்
பக்க விளைவுகள் அல்லாத மருந்துகள்
குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சை
பார்வை நேரம்:
காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
வெள்ளி விடுமுறை


வளர்க அய்யாவழி!
மலர்க தர்மயுகம்!
அய்யா துணை
அய்யா வைகுண்டர்
194-வது உதயதின விழா
காணவரும் அன்பு கொடி மக்களை
அன்புடன் வரவேற்கிறோம்.
J. தாமரை பிரதாப்
இளைஞரணி துணை அமைப்பாளர்,
அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய தி.மு.க
N. கார்த்திகா பிரதாப்
பேரூராட்சி தலைவி, தென்தாமரைகுளம்


அய்யாதுணை
வளர்க அய்யா வழி !!
மலர்க தர்மயுகம்!!!
அய்யா வைகுண்டரின் 194 - வது உதயதின விழா
சிறக்க நல்வாழ்த்துக்கள்.
RUBAN MOBILES
ரூபன் மொபைல்ஸ்
RM RUBAN MOBILES
iPhone SAMSUNG ONEPLUS vivo oppo mi Redmi realme Jio Infinix micromax Lenovo LAVA NOKIA POCO motorola
கொட்டாரம்
கிளைகள்: முகிலன்குடியிருப்பு, விவேகானந்தபுரம்
7550353533, 9962683533
உங்கள் கொட்டாரத்தில் ரூபன் ஹோம் அப்ளையன்சஸ்
எங்களிடம் அனைத்து முன்னணி நிறுவனங்களின் டிவி, பிரிட்ஜ். வாஷிங் மெஷின், ஏசி, ஃபேன், தவா, ஹோம் தியேட்டர், கிரைண்டர், மிக்ஸி, அயர்ன் பாக்ஸ், குக்கர், வாட்டர் ஹீட்டர் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் மிகக்குறைந்த விலையில் கிடைக்கும்.
RUBAN HOME APPLIANCES
எவரும் தர முடியாத விலையில்
7550353533
9514693533
வாருங்கள் வரவேற்கிறோம் ... வாழ்த்துங்கள் வளர்கிறோம்...

அய்யா வைகுண்டரின் 194-வது உதயதின விழா
சிறக்க நல்வாழ்த்துக்கள்.
விழா காணவரும் பக்தர்களை வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்.



சிவ சுடர் டிரேடர்ஸ்
உரிமை. P.சிவகுமார்
செல்: 75980 31085

சிவ சுடர் ரியல் எஸ்டேட்
உரிமை. P. பால்வர்ண பெருமாள்
செல்: 63856 16238
சன்னதிதெரு, சாமிதோப்பு


# 10 ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற அரசு பள்ளி மாணவ - மாணவிகள்!

## புரவலர் ராஜ சத்யசேகர் பரிசுகளை வழங்கி பாராட்டினார்



நாகர்கோவில், மார்ச்.04-

கோட்டையடி அரசு உயர் நிலைப் பள்ளியில் கடந்த 2024-25-ம் கல்வியாண்டு பத்தாம் வகுப்பு அரசு பொது த்தேர்வில் முதல் நான்கு இடங்களைப் பெற்ற மகிஷா தேவி, பினுதனுஜா, டேரிஷ் ஜடா , அஷ்மன் அக்சஜ் ஆகியோருக்கு பாராட்டு விழா நடந்தது.

விழாவில் பள்ளி புரவலர் ராஜ சத்யசேகர் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். விழாவுக்கு பள்ளிபுரவலர்கள் சுமதி, நிரஞ்சன், ஸ்ரீநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமையாசிரியர் சுந்தர் வாழ்த்துரை வழங்கினார். அறிவியல் ஆசிரியை சுபா நன்றியுரை கூறினார். இதில் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண டனர்.


அய்யா வைகுண்டரின் 194-வது உதயதின விழா, சிறக்க நல்வாழ்த்துக்கள்.
விழாவினை காணவரும் பக்தர்களை வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்.






வளர்க அய்யாவழி!
அய்யா துணை
மலர்க தர்மயுகம்!







தலைமைப்பதி, சுவாமிதோப்பு
அய்யா வைகுண்டர்
194-வது உதயதின விழா
மாசி 20 (04.03.2026)
காணவரும் அன்பு கொடி மக்களை அன்புடன் வரவேற்கிறோம்.
கிழக்கு வாசல் அன்ன தர்மத்திற்கு உதவிய அன்பு உள்ளங்களுக்கு நன்றி.
குரு. பால லோகாதிபதி
சாமிதோப்பு தலைமைபதி - 8778081483

சாமிதோப்பு அய்யா வைகுண்டர் தலைமை பதி கிழக்கு வாசல் முன்பு ஒவ்வொரு வெள்ளி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் நடைபெறும் அன்னதர்மத்திற்கு நன்கொடை வழங்குபவர்கள் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்புகொள்ளவும்
87 780 81 483









**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.